# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 244 — 1976 දෙසැම්බර් 17 වැනි සිකුරාදා — 1976.12.17

244 ம் இலக்கம்—1976 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 17 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III — காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள்— | |
| இறுதிக் கட்டளைகள் | — |
| முன்னறிவித்தல்கள் | — |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள்— | |
| மேல் மாகாணம் | — |
| மத்திய மாகாணம் | — |
| தென் மாகாணம் | — |
| வட மாகாணம் | — |
| கீழ் மாகாணம் | — |
| வடமேல் மாகாணம் | — |
| வடமத்திய மாகாணம் | — |
| ஊவா மாகாணம் | — |
| சப்ரகமுவா மாகாணம் | — |
| நிர்ணய உத்தியோகத்தர்களினால் காணி விற்பனைகள்— | |
| மேல் மாகாணம் | — |
| மத்திய மாகாணம் | — |
| தென் மாகாணம் | — |
| வட மாகாணம் | — |
| கீழ் மாகாணம் | — |
| வடமேல் மாகாணம் | — |
| வடமத்திய மாகாணம் | — |
| ஊவா மாகாணம் | — |
| சப்ரகமுவா மாகாணம் | — |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | 1/647 |
| காணி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 1/649 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | — |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 1/651 |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | — |


**கவனிக்க.**— இலங்கை மலே கழக ரூபா நிதியம் (கூட்டிணைத்தல்) சட்டமூலமும் மீள ஒப்படைத்தல் சட்டமூலமும் ஆயுள்வேதம் (திருத்தம்) சட்டமூலமும் கப்பற்றொழில் அபிவிருத்தி நிதியம் சட்டமூலமும் 1976 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 26 ஆந் தேதிய இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பிகளாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

*1964ஆம் ஆண்டின் 28ஆம் இலக்கக் காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)*

*5 ம் பிரிவின்படியான பிரகடனம்*

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதாயிருக்கின்றதென்றும் காணி கொள்ளும் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படும் என்றும் 1964 ம் ஆண்டின் 28 ம் இலக்கக் காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் 5 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் விவசாய, காணி அமைச்சர் கெக்ரர் சேனரத் ராஜகருண பண்டா கொப்பேகடுவ ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

கொழும் மாவட்டம், கொழும்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவு, கொழும்பு மாநகரசபை எல்லைக்குட்பட்ட வட்டார இல. 36 குறுண்டுவத்தை, மருதானையில் அமைந்துள்ளதுமானதும் நில அளவை அதிபரின் 19.03.76 ந் திகதிய முற்பிரதிப்பட இல. கொ/ ஏ/75/241 ல் காட்டப்பட்டுள்ளதுமான வரிமதிப்பு இல. 11 கின்ஸ்லி வீதி என்னும் "விஜயகிறிஸ்ரோஸ்" என்ற ஒரு காணித் துண்டின் விஸ்தீரணம் சுமார் ஏ0. றூ0. பே01.63 பின்வருமாறு எல்லைப்படுத்தப்பட்டுள்ளது.

வடக்கு : சென்ற் போல்ஸ் பள்ளி;

கிழக்கும் தெற்கும் : மார்புச் சிகிச்சைப் பிரிவும், இருதய சிகிச்சைப் பிரிவும்;

மேற்கு : கின்ஸ்லி வீதி.

எச். எஸ். ஆர். பி. கொப்பேகடுவ,
விவசாய, காணி அமைச்சர்.

குறிப்பு இல. ஜே 74 எச் 689/அக் 1/154.

கொழும்பு, 1976 ஒக்ரோபர் 4.

12-395—17.12.76 ந் திகதிய வர்த்தமானி இல. 244

---

### வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக்கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசத்தாருக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1976 ம் ஆண்டு பெப்புருவரி மீ 27 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

*1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கக் காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)*

5 ம் பிரிவின்படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதாயிருக்கின்றதென்றும் காணி கொள்ளும் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படும் என்றும் 1964 ம் ஆண்டின் 28 ம் இல. காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தல் சட்டத்தின் 5 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் விவசாய, காணி அமைச்சர் கெக்ரர் சேனாத் ராஜகருண பண்டா கொப்பேகடுவ ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

கொழும்பு மாவட்டம், திவுலப்பிற்றிய உதவி அரசாங்க அதிபர் பிரிவு, கொடிகமுவக் கிராமத்தில் அமைந்துள்ளதும் நிலஅளவை அதிபரின் 21.7.76 ந் திகதிய முற்பிரதிப் பட இல. கொ/ஏ/76/20ல் வரையப்பட்டுள்ளதுமான 10 வது மைல் கட்டை, பங்கலாவத்தை என்னும் ஒரு பகுதிக் காணியின் விஸ்தீரணம் சுமார் ஏ.0 றூ.3 பே39.5 பின்வருமாறு எல்லைப்படுத்தப்பட்டுள்ளது :—

வடக்கு—ஒலிவியாகுறூஸ் உரிமைகோரும் 10 வது மைல் கட்டை, பங்கலாவத்தை (அதே காணியின் எஞ்சிய பகுதி);

கிழக்கு—மேற்படி;

தெற்கு—நீர்கொழும்பு-கிரியுல்ல நெடுஞ்சாலை;

மேற்கு—கொடிகமுவ பாடசாலைக் கட்டிடங்கள்.

எச். எஸ். ஆர். பி. கொப்பேகடுவ,
விவசாய, காணி அமைச்சர்.

குறிப்பு இல : ஜே 75 ஈ 621/அத் 13/799.
கொழும்பு,
1976 ஒக்ரோபர் 25.

12-396—17.12.76 ந் திகதிய வர்த்தமானி இல. 244

---

எனது இலக்கம் : இஅ/4/242.

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கக் காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

**7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின 28 ஆம் இல. காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :—மேல் மாகாணத்தில், களுத்துறை மாவட்டத்தில், களுத்துறை தொட்டமுனே தெற்கு பிரிவுக் காரியாதிகாரி பிரிவில், குடா மாகல்கந்த கிராமத்தில் உள்ள க. 1366 முன் வரைதலில் துண்டு இலக்கம் 1.

| துண்டு இல. | காணியின் பெயர் | விபரங்கள் | உரிமை கோருவோர் | விஸ்தீரணம் ஏ. றூ. பே. |
|---|---|---|---|---|
| 1 | கொடும்புவாவத்த | திறந்த வெற்றுக் காணி | எச். தயாவத்தி சில்வா, டப்லியூ. பத்மாலி, டப்லியூ. அனுலாவத்தி, டப்லியூ. தயாரத்ன, டப்லியூ. இந்திராணி, டப்லியூ. பிரேமரத்ன, டப்லியூ. நந்தலத்தா, டப்லியூ. கீர்த்திரத்ன, டப்லியூ. ரத்னவீர, எல்லோரும் மாகல்கந்த, மக்கொனையைச் சேர்ந்தவர்கள் | 0 0 17·3 |

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 1977 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 01 ந் தேதி மு. ப. 9.00 மணிக்கு அழுத்கம பி. கா. காரியாலயத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக் காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடுபற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை காணிக்கப்பட்ட விபரங்களையும் 1977 ம் வருடம் பெப்ரவரி மாதம் 24 ந் தேதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

என். யூ. யஸபால,
மாவட்ட உதவி அரசாட்சி ஏசண்டும்,
காணி எடுத்தல் அதிகாரியும்.

களுத்துறை கச்சேரி,
1976 ம் ஆண்டு டிசெம்பர் மீ 07 ந் வ.

12-471—17.12.76 ந் திகதிய வர்த்தமானி இல. 244

---

குறிப்பு இலக்கம் : இஅ/4/264.

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கக் காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இல. காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :—மேல் மாகாணத்தில், களுத்துறை மாவட்டத்தில், களுத்துறை தொட்டமுனே தெற்கு பிராந்திய உதவி அரசாங்க அதிபர் பிரிவில், அழுத்கம கிழக்கு கிராமத்தில் உள்ள க. 1371 முன் வரைதலில் துண்டு இலக்கம் 1.

| துண்டு இல. | காணியின் பெயர் | விபரங்கள் | உரிமைகோருவோர் | விஸ்தீரணம் ஏ. றூ. பே. |
|---|---|---|---|---|
| 1 | மாவத்தபொடவத்த அல்லது கங்கபடவத்த | வீட்டுத் தோட்டம், 30 வருடம் வயதான 1 ஈரப்பலா மரமும், 5 வருடம் வயதான 1 மாமரமும், 1 லாவுலு மரமும், 1 கொய்யாப்பழ மரமும், 1 நிரந்தர கட்டிடமும், சீமெந்தியால் பூசப்பட்ட 1 கிணறும், 1 நிரந்தர மலசல கூடமும் கொண்டது | பீ. யஸவத்தி த சில்வா உண வட்டுன, தலவெல்ல, காலி | 0 0 28·95 |

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 1977 ம் வருடம் பெப்ரவரி மாதம் 24 ந் தேதி மு. ப. 9.00 மணிக்கு அழுத்கம பி. உ. அ. அ. காரியாலயத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடுபற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை காணிக்கப்பட்ட விபரங்களையும் 1977 ம் வருடம் பெப்ரவரி மாதம் 17 ந் தேதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

என். யூ. யஸபால,
மாவட்ட உதவி அரசாட்சி ஏசண்டும்,
காணி எடுத்தல் அதிகாரியும்.

களுத்துறை கச்சேரி,
1976 ம் ஆண்டு டிசெம்பர் மீ 07 ந் வ.

12-472—17.12.76 ந் திகதிய வர்த்தமானி இல. 244

**1964 ஆம் ஆண்டின் 28ஆ ம் இலக்கக் காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப் படி திருத்தப்பட்டவாறுன காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

5 ம் பிரிவின்படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதாயிருக்கின்ற தென்றும் காணி கொள்ளும சட்டத்தின ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படும் எனறும் 1964 ம ஆண்டின் 28 ம் இலக்கக் காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தபபட்டவாறுன காணி எடுதத்ற் சட்டத்தின 5 ம் பிரிவின (1 ம் உட்பிரிவின பிரகாரம் விவசாய, காணி அமைச்சர் ஹெக்டர் செனரத் ராஜகருணு பண்டா கொப்பேகடுவ ஆகிய நான் இத்தால பிரகடனம் செய்கினறேன.

கண்டி மாவட்டம், தும்பனே பகுதி இறைவரி உத்தியோகத்தர் பிரிவு, வேத்தாவ கிராமத்திலுள்ள, சியம்பலாகஹமுலஹேன அல்லது பவுல் பாவ எனப்படும் காணியில் சுமார் 23 ஏக்கர், 2 றூட், 19 பர்ச்சஸ் விசாலமுள்ள ஒரு துண்டு காணி. இக் காணியை அளவையாளர் அதிபதியாரால் தயாரிக்கப்பட்ட மஹ 2024 இலக்கம் கொண்ட முற்கிடைப் படத்தில் காட்டப்பட்ட காணித் துண்டு. இதன் எல்லைகள் :—

வடக்கு : ஓகொடபொல கிராமம்—இ. கி. ப. 137 ;

கிழக்கு : இ. கி. ப. 138 ல் காணித் துண்டுகள் 84, 83, 86, 85 ;

தெற்கு : இ. கி. ப 138 ல் காணித் துண்டுகள் 87, 88, 86 ;

மேற்கு : இ. கி. ப. 138 ல் காணித் துண்டுகள் 89, 90, 81, 82, 80, 79, 78, 33, 192, 83, 191, 190.

எச். எஸ். ஆர். பி. கொப்பேகடுவே,
விவசாய, காணி அமைச்சர்.

குறிப்பு இல. : ஜே. 75 எல். 341 (விச)—எல் டி./ எப். 593,
கொழும்பு,
1976 ம் ஆண்டு ஒகத்து மீ 8 ந் ஆ.

12–480—17.12.76 ந் திகதிய வர்த்தமானி இல. 244

---

**1964 ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்த) சட்டப் படி திருத்த பட்டவாறுன காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

5 ம் பிரிவினபடியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதாயிருக்கின்ற தென்றும் காணி கொளளும் சட்டத்தின ஏற்பாடுகளின பிரகாரம் அது எடுத்துகொள்ளப்படும் என்றும் 1964 ம் ஆணடின் 28 ம் இலக்கக் காணி எடுத்தல (திருத்தச்) சட்டப்படி திருததபபட்டவாறுன காணி எடுத்தற் சட்டத்தின 5 ம் பிரிவின (1) ம் உட்பிரிவின பிரகாரம் விவசாய, காணி அமைச்சர் ஹெக்டர் செனரத் ராஜகருணு பண்டா கொப்பேகடுவ ஆகிய நான இத்தால் பிரகடனம் செய்கின்றேன.

கொழும்பு மாவட்டம், கொழும்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவு, கொழும்பு மாநகரசபை எல்லைக்குட்பட்ட, கொள்ளுப்பிட்டி வட்டார இல. 37 கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ளதும் நில அளவை அதிபரின் 27.05.76 ந் திகதிய முற்பிரதிப் பட இல. கொ/எ/76/91 ல் காட்டப் பட்டுள்ளதுமான வரிமதிப்பு இல 89, 91 கொள்ளுப்பிட்டி வீதி என்னும் ஒரு காணித்துண்டு பினவருமாறு எல்லைப்படுத்தப்பட்டுள்ளது :—

வடக்கு : பி. பி. கொ. 1005 ன் துண்டு 1 ;

கிழக்கு : பி. பி. கொ. 4268 ன் துண்டுகள் 1. 2 ;

தெற்கு : பி. பி. கொ. 1551 ன் துண்டு இல. 1 ;

மேற்கு : கொள்ளுப்பிட்டி வீதி.

எச். எஸ். ஆர். பி. கொப்பேகடுவே,
விவசாய, காணி அமைச்சர்.

குறிப்பு இல. : ஜே. 76 சி. 195/அத் 184,
கொழும்பு,
1976 ம் ஆண்டு ஒகஸ்ட் மீ 30 ந் ஆ.

12–470—17.12.76 ந் திகதிய வர்த்தமானி இல. 244

---

## காணி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள்

ம.அ.ச. இல. எஸ்பிடி/எல்/எஸ்ரி 11/எச்/9/1.

**1973 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க அரச காணிகள் விற்பனைச் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் அறிவித்தல்**

உழவர் வகுப்பினருக்கு விற்பனை மூலம் அரசாங்கக் காணி பராதீனப்படுத்துவதற்கான அறிவிப்பு

கமத்தொழில் அபிவிருத்தியின் நோக்கத்திற்காக, 1973 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, அரச காணிகள் விற்பனைச் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ், இதனேடுள்ள “ அ ” அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள அரசகாணிகளை விற்பனை மூலமாகப் பராதீனப்படுத்துவதற்காக உழவர் வகுப்பைச் சேர்ந்த ஆட்களின் விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்வதற்கும், அத்தகைய காணி எந்த ஆட்களுக்குப் பராதீனப்படுத்தப்படல் வேண்டுமெனத் தெரிவு செயவதற்கும், காலக்கிரமத்தில் அறிவிக்கப்படும் இடங்களிலும் தேதிகளிலும், அநுராதபுரி நிருவாக மாவட்டத்தின் அரசாங்க அதிபர் (இதனகத்திதன் மேல் அரசாங்க அதிபர் எனக் குறிப்பிடப்படும்) காணிக் கச்சேரிகளை நடாத்துவார் என இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

2. இதனேடுள்ள “ ஆ ” அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள துலானேகளில் (கிராம சேவகர் பிரிவுகள்) 1970 ஆம் ஆண்டு ஆனி மாதம் 1 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் நிரந்தரமாகக் குடியிருந்தவர்கள் என நிரூபிக்கக்கூடியவர்களும் 18 வயதுக்கு மேற்பட்டவர்களுமாகிய உழவர்களிடமிருந்து மாத்திரம் விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்படும்.

3. விண்ணப்பப் படிவங்கள் பதவியா பகுதி உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திலிருந்தும், “ ஆ ” அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள கிராமசேவகர் காரியாலயங்களிலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

4. விண்ணப்பங்கள் இதனேடுள்ள “ ஆ ” அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள இடங்களிலும், தேதிகளிலும் கையளிக்கப்படலாம். அல்லது அநுராதபுரி அரசாங்க அதிபர் அவர்களுக்கு 1976 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 24 ஆந் திகதியில் அல்லது அதற்கு முன்னதாகக் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பத்தை உள்ளடக்கிய தபால் உறையின் இடது கை மேல் மூலையில் “ காணிக் கச்சேரி விண்ணப்பம்—திருகோணமலை தேர்தற் தொகுதி ” எனத் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

5. காணி பெற்றுக்கொள்ள விரும்பும் ஒவ்வொரு ஆளும் காணிக் கச்சேரிக்கு நேரில் வரவேண்டும் அல்லது அவருக்காக வேறெருவர் தோற்றுவதற்கு எழுத்துமூலம் அவருக்கு அதிகாரமளித்தல் வேண்டும். விணணப்பகாரர் அல்லது அவரின் பிரதிநிதி காணிக் கச்சேரிக்கு வராவிட்டால் விண்ணப்பகாரர் தமது விண்ணப்பஞ் சம்பந்தமாகத் தொடர்ந்து நடவடிக்கை எடுப்பதற்கு விருப்பமில்லையென அரசாங்க அதிபரினுல் கருதப்படும்.

6. தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பகாரர் ஒவ்வொருவரும் சுமார் அரை ஏக்கர் குடும்ப மனையகக் காணியும், இரண்டரை ஏக்கர் நீர்ப்பாசனக் காணியும் பெற்றுக்கொள்ள உரித்துடையவராவர்.

அரை ஏக்கர் குடும்ப மனையகக் காணியின் கொள்வனவு விலை ரூபா ஆயிரத்துப் பதினைந்து (ரூபா 1,015/–) எனவும் ஓர் ஏக்கர் நீர்ப்பாசனக் காணியின் கொள்வனவு விலை ரூபா மூவாயிரத்து நூற்றி நாற்பத்தைந்து (ரூபா 3,145/–) எனவும் காணி ஆணையாளரினுல் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அபிவிருத்தி செய்யப்படாத காணியின் பெறுமானம், அபிவிருத்திச் செலவு, அபிவிருத்திக்கான பண, பொருளுதவிச் செலவு ஆகியன இதிலடங்கும்). காணிக்குத் தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொருவரும் தெரிவுசெய்யபபட்ட தேதியிலிருந்து இரண்டு கிழமைகளில், தாம் கொள்வனவு விலையின் முழு தொகையையும் உடனடியாகக் கொடுபபதற்கு விருப்பமுடையவரா அல்லது தவணைகளில் கொடுப்பதற்கு விருப்பமுடையவரா என அரசாங்க அதிபருக்கு அறிவிக்கவேண்டும். ஒருவர் முழுத் தொகையையும் உடனே கட்டத் தெரிவு செய்யுமிடத்து, அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட ஒருமாத காலததில் அரசாங்க அதிபருக்கு அதன்படி கொடுப்பனவு செய்யப்படல் வேண்டும். ஒருவர் தவணைகளில் கட்டத் தெரிவு செய்யுமிடத்து, அரசாங்க

அதிபர் தாம் தகுதியெனக் கருதும் அக்காலத்தில் சமவருடத் தவணைகளில் கொடுப்பனவு செய்ய இடமளிக்கலாம். அக்காலம் இருபது ஆண்டுகளுக்கு மேல் இருத்தலாகாது. அந்த ஆள் அத்துடன் அந்தந்த வருடத்திற்குரிய வருடத் தவணைக் கொடுப்பனவுக்குப் பின்பு, ஒவ்வொரு வருடமும் கொள்வனவு விலையில் கட்டாமலிருக்கும் மிகுதிப் பணத்தில் 4% (நான்கு வீதம்) வட்டி கட்டவேண்டும்.

7. தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பகாரர் ஒவ்வொருவரும் எந்தக்காணிக்கு அவர் தெரிவு செய்யப்பட்டாரோ அந்தக் காணிக்கு காணி ஆணையாளரினால் தீர்மானிக்கப்பட்ட கொள்வனவுப் பணம் முழுவதையும் செலுத்தியவுடன் 1973 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க அரச காணிகள் விற்பனைச் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் 11 வது பிரிவின் கீழ் அக்காணிக்கு வழங்கற் பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு உரித்துடையவராவர்.

8. இந்த அறிவிப்பின் கீழ் விற்கப்படும் சகல காணிகளுக்கும் 1972 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கமத்தொழில் விளைச்சல் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகும். அச்சட்டத்தின ஏறபாடுகளுக்கிணங்க திருப்தியாக அபிவிருத்தி செய்யப்படாத காணி எதனையும் உடைமை நீக்கல் செய்ய இச்சட்டத்தின கீழ் கட்டளையொனறு ஆக்கப்படலாம்.

9. காணி பெறும் ஒவ்வொரு ஆளும், அபிவிருத்தி, நீர் முகாமை, சேவைக் கட்டணங்கள் கொடுப்பனவு தொடர்பாக மகாவலி அபிவிருத்தி சபையினால் காலத்துககுக்காலம் ஆக்கப்படும் விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் கட்டுப்படல் வேண்டும்.

10. மேலதிக விபரங்கள் பதவியா உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திலிருந்தும், அநுராதபுரக் கச்சேரி அரசாங்க அதிபரிடமிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

கச்சேரி,
அநுராதபுரி,
1976 ம் ஆண்டு டிசெம்பர் மீ 09 ந் உ.

ஆர். எம். என். பி. றலபனவ,
இணை அரசாங்க அதிபர்,
அநுராதபுரி நிருவாக மாவட்ட அரசாங்க
அதிபருக்காக.

### அட்டவணை "ஆ"

பின்வருமாறு எல்லைகளைக் கொண்டதும், அநுராதபுர மாவட்டத்தில், கெக்கிறுவை, பலாகல பகுதி உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவில் உள்ளதும், கீழ்க்காணும் கிராம சேவகர்கள் பிரிவில் உள்ளதும் ஆகிய சுமார் 6465 ஏக்கர் நீர்ப்பாசனக் காணியும், 1293 ஏக்கர் குடும்ப மனையகக் காணியும் உளளடக்கிய, கந்தலமத் திடடத்தின் எச் 9 பிரதேசத்திலுள்ள காணிப்பரப்பு முழுவதும் :—

வடக்கு : கலாவேவவும், பலலுவேவவும் ;

கிழககு : டம்புலு ஓயா ;

தெறகு : டம்புலு ஓயா நீர்த்தேக்கமும், டம்புலு ஓயா நீர்த்தேக்கத்தின் இடது கரை பிரதான கால்வாயும் ;

மேற்கு : டம்புலு ஓயா நீர்ததேக்கத்தின இடது கரை பிரதான கால்வாயும், கட்டனெல்ல ஓயாவும் றணவவேவவும்.

| இல. | கிராமப் பெயர் | உதவி அரசாங்க அதிபர் பிரிவு | கிராமசேவகர் துலான இல. | இறுதி வரை பட இல. |
|---|---|---|---|---|
| 1 | கிங்குறுவல்பிட்டிய | பலாகல | 48 | 1156 |
| 2 | கிறனேகம | ” | 48 | 1125 |
| 3 | தெலதின்ன வேவ | ” | 48 | 1127 |
| 4 | துலலகய வேவ | ” | 48 | — |
| 5 | திம்பிறவெல | ” | 48 | 1158 |
| 6 | பனகுறுகஹகம | ” | 48 | 1129 |
| 7 | அளுகெதவேவ | ” | 48 | 1159 |
| 8 | பொகஹவேவ | ” | 48 | 1126 |
| 9 | றனவ | ” | 48 | 1116 |
| 10 | பொபபேகம | ” | 48 | 1118 |
| 11 | பத்துவேவ | ” | 48 | 1117 |
| 12 | உனதுறுவகல்மில்லேவ | ” | 51 | 1120 |
| 13 | குடாகம | ” | 51 | — |
| 14 | கததுகெலியாவ | ” | 51 | 1117 |
| 15 | வததகம | ” | 51 | 1019 |
| 16 | லொககுணேதகம | ” | 51 | 1111 |
| 17 | கல்லேனவத்த | ” | 51 | 1090 |
| 18 | கெல்லம்பகஸவேவ | ” | 51 | 1094 |
| 19 | றடகமவதத | ” | 51 | 1095 |
| 20 | கல்கிறியகம | ” | 51 | 1098 |
| 21 | கடடகவேவ | ” | 51 | 1097 |
| 22 | பகாமினியகம | ” | 51 | 1093 |
| 23 | குறியாகம | ” | 51 | 1115 |
| 24 | கொடிகாறகம | ” | 51 | 1091 |
| 25 | திகவெனவேவ | ” | 51 | 1092 |
| 26 | மகாஇநதிகொல்லேவ | ” | 51 | 1084 |
| 27 | குடாஇநதிகொல்லேவ | ” | 51 | 1085 |
| 28 | டிக்வேவ | ” | 51 | 1086 |
| 29 | உல்பொதகம | ” | 51 | — |
| 30 | எல்லேவேவ | ” | 50 | 1077 |
| 31 | பண்டாரபத்தன | கெக்கிறுவ | 47எ | 1110 |
| 32 | கடாதுகம | ” | 47எ | 1113 |
| 33 | கொன்பொலயாகம | ” | 47எ | 1109 |
| 34 | தென்னேவ | ” | 52 | 1012 |
| 35 | அளுத்வேவ | ” | 52 | 1013 |
| 36 | உந்துறுவ | ” | 52 | 1100 |
| 37 | தனிய | ” | 52 | 1101 |
| 38 | தம்பவத்தவென | ” | 52 | 1011 |
| 39 | மறந்தவத்தவென | ” | 52 | 1102 |
| 40 | கஹம்பிலியாவத்தவென | ” | 52 | 1103 |
| 41 | நன்குறியாகம | ” | 52 | 1108 |

| | | |
|---|---|---|
| சிபார்சு செய்யப்பட்ட பயிர்கள .. | | நிலப்பண்பாடு, நெல், உப உணவுப்பயிர்கள் ஆகியவற்றில் தங்கியுள்ளது |
| இட்டிய நிலப்பரப்பு | .. | தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு விண்ணப்பகாரரும் அரை ஏக்கர் குடும்பமனையகக் காணியும், இரண்டரை ஏக்கர் நீர்ப்பாசனக் காணியும் பெறறுக்கொள்வர் |
| விலை .. | .. | அரை ஏக்கர் குடும்ப மனையகக் காணி ரூபா 1,015. ஓர் ஏக்கர் நீர்ப்பாசனக் காணி ரூபா 3,145. |

அட்டவணை " ஆ "

திருகோணமலை தேர்தற்றொகுதியில் அநுராதபுரி நிருவாக மாவட்டத்தின் பதவியா உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள பின்வரும் துலாளைகளில் இருக்கும் ஆட்களினுல் மாத்திரம விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும்

| கிராம சேவகர் பிரிவு இலக்கமும் பெயரும் | கிராமப் பெயர்/ காணித்துண்டின் இல. | விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளும் தேதியும் நேரமும் | விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளும் இடம் |
|---|---|---|---|
| 31 டி பதவியா ஸ்ரீபுர .. | 10 ம் காணித்துண்டும் பதவியா குடியேற்றத்திட்டம் கட்டம் II 9 ம் காணித்துண்டின் ஒரு பகுதியும் (திருகோணமலை தேர்தற் தொகுதியைச் சேர்ந்த ஆட்கள் மாத்திரம்) | 22.12.1976 .. மு. ப. 9.00 | 10 ம் காணித்துண்டின் பாடசாலையும், பதவியா ஸ்ரீபுர வித்தியாலயமும் |
| 31 ஐ ஜயந்திவெவ .. | 11, 12, 13 ம் காணித்துண்டும், பதவியா குடியேற்றத் திட்டம் கட்டம் III 9 ம் காணித்துண்டின் ஒரு பகுதியும். (திருகோணமலை தேர்தற தொகுதியைச் சேர்ந்த ஆட்கள் மாத்திரம்) | ஷை | .. ஜயந்திவெவ வித்தியாலயம் |
| 31 ஐ ஜயந்திவெவ .. | பழைய—மதவாச்சி இறமடுவ நாகஸ்வெவ. (திருகோணமலை தேர்தற் தொகுதியைச் சேர்ந்த ஆட்கள் மாத்திரம்) | ஷை | .. பழைய மதவாச்சி வித்தியாலயம் |

12–458—17.12.76 ந் திகதிய வர்த்தமானி இல. 244

---

# நானுவித காணி அறிவித்தல்கள்

எனது இல : 4/8/3387

அ.அ. இல : 20/3/2/29.

**முடிக்குரிய காணிப்பிரமாணம் 21 (2) இன் கீழ் அறிவித்தல்**

இத்தால் அறிவிப்பது யாதெனில் கேகாலை மாவட்டம் கதபத்துவ அட்டுலகம் மேற்கும் பனவல் கோரளே தெகிஓவிட்ட பிராந்திய உபஅரசாங்க அதிபரின் பிரிவிலுள்ளதும் கல்துவ கிராமத்திலுள்ளதும், பி.பி. கே. 330 ஆம் இலக்க பூர்வாங்கப் படதில் 26 ஆம் இலக்கக் காணித்துண்டு எனப்படும் சுமார் 29·9 பேச்சர்ஸ் விஸ்தீரணமுடைய காணியிலிருந்து சுமார் 10 பேச்சர்ஸ் அரச காணியை வரைய க்கப்பட்ட றுவன்வல்ல பலநோக்கு சேவா கூட்டுறவுச் சங்கத்திற்குத் தொகைப் பண்டகசாலை அமைப்பதற்காக பதிவு இல. கே. 384 ஆம் இலக்க பலநோக்கு சேவா கூட்டுறவுச் சங்கம் குத்தகையாகத்தரும்படி கேட்டு விண்ணப்பித்துள்ளார்கள்.

2. விண்ணப்பித்துள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :—

வடக்கு : பிரத்தியேகக் காணியும், 26 ஆம் துண்டின் பகுதியும் ;

தெற்கு : தெரு ;

கிழக்கு : 26 ஆம் துண்டின் பகுதி ;

மேற்கு : 26 ஆம் துண்டின் பகுதியும் தெருவும்.

3. விண்ணப்பித்துள்ள காணி குத்தகையாகக் கொடுக்கக் கூடிய தாகவுள்ளது. எனவே கீழ்க் காணப்படும் நிபந்தனைகளுடன் ஏனைய நிபந்தனைகளுக்கும் அமைவாக இக்குத்தகையை வழங்க உத்தேசிக்கப் பட்டுள்ளது :—

(அ) காலம் : 30 வருடம் ;

(ஆ) வருடாந்தக் குத்தகைப் பணம்: ரூபா 7.50 ;

(இ) குத்தகை பெறுபவர் குத்தகை தொடங்கிய திகதியிலிருந்து ஒரு வருட காலத்தினுள் கேகாலை மாவட்ட அரசாங்க அதிபர் திருப்திக்கமைவாக குத்தகைக்காணியில் வரைய றுக்கப்பட்ட றுவன்வெல்ல பலநோக்கு சேவா கூட்டுறவுச் சங்கத்திற்குத் தேவையான 20′ × 40′ விசாலமான அறை அடங்கிய கட்டிடம் அமைத்து முடிகக வேண்டும் ;

(ஈ) குத்தகைக்காரர் குத்தகைக்காணியை 20′ × 40′ அறை அடங்கிய கட்டிடம் அமைப்பதற்கல்லாது வேறு எவ்வித தேவைக்கும் பாவித்தலாகாது.

4. இக்குத்தகையை வழங்கக் கூடாதெனில் அதற்குரிய காரணங்களைக் கீழ்க்காணப்படும் திகதியிலிருந்து ஆறு வாரஙகளுக்குள்ளாக எழுத்து மூலமாக எனக்குக்கிடைககக் கூடியதாக அறிவித்தாலேயல்லாது இக்குத் தகை வழங்கப்படும்.

எச். டி. தர்மசேன,
காணிக் கமிசனருக்காக.

காணிக் கமிசனர் காரியாலயம்,
கொழும்பு 1, 1976 ம் ஆண்டு திசெம்பர் மீ 17 ந உ.

12–340—17.12.76 ந் திகதிய வர்த்தமானி இல. 244

அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய கிரய விகிதங்கள்

19 6 மாச்சு 01 ந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது

# "இலங்கைக் குடியரசு வர்த்தமானி"

வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்,

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. காரியாலய நேரம் மு. ப. 8.00 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 2.45 மணிவரை நடைபெறும்.

5. சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும். தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. சகல கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல் விசேஷமாக தட்டச்சு அடித்தல் பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்படவேண்டிய விளம்பரங்கள் "சுப்பிறீம் கோட் புறொக்ரறால்" கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1976 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 01 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :—

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய .. .. .. | 30 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதி .. .. | 30 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் .. .. .. | 330 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் .. .. | 660 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைக் குடியரசு வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. 1975 ம் ஆண்டு யூலை மாதம் 01 ம் திகதி தொடக்கம் ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.

13. சந்தா விபரம் யூலை 01, 1975 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.

| இலங்கைக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் | | வெளியூர் | |
|---|---|---|---|---|
| | ரூ. | ச. | ரூ. | ச. |
| ஒவ்வொரு பகுதியும் .. .. .. | 92 | 0 .. | 120 | 0 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு .. .. .. | 72 | 0 .. | 84 | 0 |
| முதற் பகுதியின் இரு பிரிவுகள் .. .. .. | 87 | 0 .. | 103 | 0 |

ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான கால வெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.

தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | விலை | | தபாற்செலவு (உள்ளூர்) |
|---|---|---|---|
| | ரூ. | ச | ரூ. ச. |
| (அ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் ஒவ்வொரு பகுதியும் .. .. .. | 1 | 0 .. | 0 20 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் ஒவ்வொரு பகுதியும் .. .. | 2 | 0 .. | 0 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. .. | 0 | 60 .. | 0 15 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. .. | 1 | 20 .. | 0 15 |

இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத் தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற் பெட்டி இல. 500, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக்கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு,** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ள மாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**— குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக் கொள்ளப்படுமென்பதையும் அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக்கொள்ளப் படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை 1977

| மாதம் | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|
| **சனவரி** | வெள்ளி | 07.01.77 | நண்பகல் 12 | வெள்ளி | 31.12.76 | |
| | வியாழன் | 13.01.77 | நண்பகல் 12 | வெள்ளி | 07.01.77 | |
| | வெள்ளி | 21.01.77 | நண்பகல் 12 | வியாழன் | 13.01.77 | |
| | வெள்ளி | 28.01.77 | நண்பகல் 12 | வெள்ளி | 21.01.77 | |
| **பெப்புருவரி** | வெள்ளி | 04.02.77 | நண்பகல் 12 | வெள்ளி | 28.01.77 | |
| | வெள்ளி | 11.02.77 | நண்பகல் 12 | வெள்ளி | 04.02.77 | |
| | வெள்ளி | 18.02.77 | நண்பகல் 12 | வெள்ளி | 11.02.77 | |
| | வெள்ளி | 25.02.77 | நண்பகல் 12 | வெள்ளி | 18.02.77 | |
| **மாச்சு** | வெள்ளி | 04.03.77 | நண்பகல் 12 | வெள்ளி | 25.02.77 | |
| | வெள்ளி | 11.03.77 | நண்பகல் 12 | வெள்ளி | 04.03.77 | |
| | வெள்ளி | 18.03.77 | நண்பகல் 12 | வெள்ளி | 11.03.77 | |
| | வெள்ளி | 25.03.77 | நண்பகல் 12 | வெள்ளி | 18.03.77 | |

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1976ம் ஆண்டு திசெம்பர் மீ 17 ந் உ.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது